



கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட திமுக தகவல் தொழில் நுட்ப அணிக்கு மாவட்ட / பகுதி / வட்ட/ அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் சி.ஹெச். சேகர், முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட அமைப்பாளர் ஜி.வி. சரவணன், துணை அமைப்பாளர்கள் மற்றும் விண்ணப்பித்த கழகத் தோழர்கள், தோழிகள், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கடலூர் மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, மங்களூர் ஒன்றியம், கழுதூர், கண்ட மத்தான் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

## விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு

# கழகத் தோழர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) - பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) - வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் - வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 1.1.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. விழுப்புரம் வடக்கு மாவட்டத்திலுள்ள திண்டிவனம் , செஞ்சி, மயிலம் சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6-லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7-லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id card) படிவம் 8-லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்கப் படிவம் 6 பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்காளர் சேர்ப்பதற்கு www.nvsp.in மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணையதளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம் - 6 ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம் - 6ன் காலம் IV-ல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024
2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.
3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்.
4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 6.1.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியில், விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, மாநில, ஒன்றிய, நகர, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், துணை செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், துணை அமைப்பாளர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA-2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரையும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு : வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA-2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), இந்தப் பணியில் முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOக்களுடன் உடனிருந்து கண்காணிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**ப.சேகர்**

பொறுப்பாளர் - விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க





உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வர் பொறுப்பு ஏற்றதை ஒட்டி சென்னை வடகிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் ஆலோசனைப்படி சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தக அணி அமைப்பாளர் லயன் வீ.தியாகராஜன் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சென்னை திருவொற்றியூரில் உள்ள ரெக்கோபாத் முதியவர் இல்லத்தில் மதியம் அசைவ உணவும் அவர்களுக்கான மளிகை பொருட்கள் அவர்கள் பொழுது போக்குவதற்காக கேரம் போர்டு செஸ் போர்டு பரமபதம் போன்ற விளையாட்டு பொருட்களுடன் படிப்பதற்கு புத்தகங்கள் வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ்

# திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.131 கோடி மதிப்பில் 225 சாலை பணிகள் நிறைவு!

## கோரமங்கலம் ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

*திருவள்ளூர், அக். 04*

தேசப்பிதா மகாத்மா காந்தி ஜெயந்தியை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோரமங்கலம் ஊராட்சியின் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.நரசிம்மராஜு தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். நடைபெற்ற கிராம சபையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பொதுமக்களில் கோரிக்கைகளை கேட்டு அறிந்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

தேசப்பிதா மகாத்மா காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் 12,524 கிராம சபை கூட்டம் நடைபெற்று வருகிறது. இந்த கிராம சபை மக்களாட்சிக்கு இணையானது என்று உச்சநீதிமன்றமே கூறியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருடத்திற்கு நான்கு முறை நடைபெற்ற கிராம சபை கூட்டம் வருடத்திற்கு தமிழ்நாட்டில் ஆறு முறை கிராம சபை நடைபெறும் அறிவித்தது மற்றும் அல்லாமல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரை அருகே உள்ள குக்கிராமான பாப்பம்பட்டியில் நடைபெற்ற கிராம சபையில் கலந்து கொண்டது மட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பட்டின் படி அமைச்சர் பெருமக்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களின் தொகுதியில் நடக்கின்ற கிராம சபை கூட்டத்தில் கலந்து கொள்ள அறிவுறுத்தினார்.

அதன் அடிப்படையில் ஆறு கிராம சபை கூட்டம் நடைபெற்று வருகிறது. இந்த கிராம சபையில் நடைபெற்ற, நடக்கின்ற, இனி நடக்கப் போற போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்படும். அந்த வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.131 கோடி மதிப்பீட்டில் 225 சாலை பணிகள் முடிவு பெற்றுள்ளன.

2024-2025 திட்டத்தின் கீழ் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 42 சாலை பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திற்கு மட்டும் 4 சாலை பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அது மட்டுமல்லாமல் கலைஞரின் கனவு இல்லம் திட்டப் பணிகள், விடியல் பயணம் திட்டத்தில் 420 கோடி முறை மகளிர்கள் பயணம் செய்துள்ளார்கள், தாய் வீட்டு சீதனம் போல் மாதந்தோறும் ரூ.1000 மகளிர் உரிமைத் தொகையும், கூட்டுறவு கடன் ரத்து, 2.5 இலட்சம் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் வழங்கியுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் கல்வித் துறையினை மேம்படுத்தும் வகையில் அரசு பள்ளியில் ஒன்று முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்த மாணவ - மாணவியருக்கு மடிக்கணினி, இலவச பஸ் பாஸ், விலை இல்லா புத்தகம் மற்றும் சீருடை வழங்கி உயர்கல்வி தொடரும் அரசு பள்ளிகளில் படித்த மாணவ - மாணவியருக்கு ரூ.1000 வழங்கி கல்வியை முன்னேற்றத்திற்கு கொண்டு சென்றவர் முதலமைச்சர்.

அது மட்டுமல்லாமல் முதலமைச்சரின் காலை உணவு திட்டப் பணிகள் போன்ற திட்டங்களை அறிவித்தது மட்டுமல்லாமல் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள் என சிறுபான்மையினர் நலன் மற்றும்



அயல்நாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக தூய்மையை சேவை 2024 உறுதி மொழியினை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஏற்றுக் கொள்ள அனைவரும் எடுத்துக் கொண்டார்கள். தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் தூய்மை பணியை சிறப்பாக பணியாற்றிய தூய்மை காவலர்களுக்கு பாராட்டு சான்று மற்றும் கேடயம் வழங்கியும், மாவட்ட வழங்கல் துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையினை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து திருத்தணி நகராட்சி பகுதிகளில் சுமார் 4.60 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,274 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்தினை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பார்வையிட்டு திட்ட பணிகளின் தற்போதைய தன்மையினை கள ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார் .

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திட்ட இயக்குனர்கள் வை ஜெயக்குமார், செல்வராணி உதவி ஆட்சியர் பயிற்சி ஆயுஷ் குப்தா, திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் தீபா, இணை இயக்குனர் முருகன், உதவி இயக்குனர் ராஜ்குமார், திருத்தணி வட்டாட்சியர் மலர்விழி மாநில மாவட்ட நிர்வாகிகள் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட பொருளாளர் எம்.மிதுன் சக்ரவர்த்தி, ஜி.விமல் வர்ஷன், ஒன்றிய நகரச் செயலாளர்கள் என். கிருஷ்ணன், ஆர்த்தி ரவி, திருத்தணி வி.வினோத் குமார், ஜி.நாராயண பிராசத் ஆ.சாமிராஜ், அகூர் மாணிக்கம், சாம் சுந்தர், ம.கிரண், டி.கே.பாபு, ராமதாஸ், கோவர்தன், கன்னியப்பன், சுசிலா சுப்பிரமணி, டில்லி பாபு, ஹரி பாபு, வேலாயுதம், அசோகுமார், வே.தியாகராஜன், கராத்தா நாகராஜ், பிரசாத், அப்துல்லா, லோகநாதன், சித்திக் அலி, பன்னீர் செல்வம் மற்றும் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.





தி.மு.க. தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆலோசனையின்படி தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு எழும்பூர் தொகுதி, மண்டலம் – 8 வார்டு – 99 உட்பட்ட அனைத்து சேவை துறை அதிகாரிகள் ஒருங்கிணைப்பு மற்றும் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எழும்பூர் தொகுதி, 99வது வார்டு மாநகராட்சி மாமன்ற உறுப்பினரும் கழக அயலக அணியின் மாநில துணைச் செயலலருமான பரிதி இளம்சுருதி தலைமையில் நடைபெற்றது. இதில் மண்டலம் 8 அதகாரி சுந்தரராஜன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

